# யுத்தத்தின் பின்னரான சமூக ஒருமைப்பாட்டு நிலை: நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவை மையமாகக் கொண்ட ஒரு விசேட ஆய்வு

**ஏ.எம். நிசார்**

nisaram@gmail.com

**சுருக்கம்:** 2009ம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் சமூக நல்லிணக்கம் என்ற பதத்திற்கு பதிலாக சமூக ஒருமைப்பாடு என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. சமூக ஒருமைப்பாடு என்பது ஒவ்வொரு தனி நபரும் அவர்களுடைய உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுடன் செயற்பாடு மிக்க வகையில் இயங்கக்கூடிய அனைவருக்குமான சமூகத்தை அடைவதாகும். பரந்த சமூகத்திற்கான தேவையைக் கொண்ட இலக்கு, ஒருவரின் வயது, மதம், இனம், சாதி,குலம், மத நம்பிக்கைகள், கலாசாரப் பின்னணி, மற்றும் அரசியல் தொடர்பு என்பவற்றைக்கருதாது அனைவருக்குமான சம சந்தர்ப்பத்தை வழங்குவதைக் கொண்டதாகும். இந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச சமூகமானது கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இன முரண்பாட்டினால் சமூகம் முற்றாகப்பாதிக்கப்பட்டு காணப்பட்டிருந்ததுடன், பொருளாதார, அரசியல் மற்றும் சமூக உரிமைகளின் ஒட்டு மொத்த புறக்கணிப்பினை அல்லது தாக்கத்தினைப் பெற்றும் வந்துள்ளது. இவ்வாறான உரிமைப்புறக்கணிப்பினைப் பெற்று வந்த இப்பிரதேச மக்கள் 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த காலப்பகுதியின் பின்னர் தாங்கள் ஏனைய சமூகத்தைப்போன்று சமூக அந்தஸ்துடன் கூடிய நடத்தைகள், மனோநிலைகள், மற்றும் கட்டமைப்பினையுடைய சமூக ஒருமைப்பாட்டினை பெற முயற்சி செய்வதுடன் அவர்களது நடத்தைகளும் மாற்றமடைந்து வருகிறது. யுத்தத்தின் பின்னரான இப்பிரதேசத்தின் சமூக ஒருமைப்பாட்டு நிலை சமூக ஒருமைப்பாட்டு செயல்முறையினூடாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சமூக ஓருமைப்பாட்டில் நடத்தை ரீதியாக பிரிவினைகள் காணப்படுகின்றன. தனிமை, ஏனைய சமூகத்துடன் குறைவான தொடர்பாடல், சமூகத்திற்கிடையிலான மனத்தாக்கங்கள் ஆய்வினூடாக அடையாளங்காணப்பட்டுள்ளன. அத்துடன் மனோநிலை ரீதியாக பூரணமான உரிமைகளைத் தாங்கள் பெற்றுக்கொள்வதில் காணப்படும் குறைபாடு, மக்கள் பிரிந்து வாழ்தல், ஒத்திசைவில் காணப்படும் பயம், சமூகப்பிரிவுகள் என்பனவும் அடையாளங் காணப்பட்டுள்ளன. கட்டமைப்பு ரீதியாக ஏனைய சமூகத்துடன் ஒப்பிடுகையில் அரசியல், பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையிலான பின்தங்கிய நிலையும், மேலிருந்து கீழான அதிகார முறையும் இவர்களிடையே காணப்படுகிறது. இவ்வாய்வுப் பிரதேசங்களில் கல்வியறிவின் குறைவு, தொழிற்பயிற்சியின்மை, சமூக உறவில் காணப்படும் மந்த நிலை, மத மாற்றம், கல்விக்கான வளக் குறைவு, கிராமிய மட்ட கழகங்கள் வலுவிழந்து காணப்படுகின்றமை போன்றனவும் முறையான வலுவூட்டல் இல்லாமையும், பொது நல வசதிகளான நூலகம், வைத்தியசாலை, ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகளும் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாறான குறைபாடுகளில் இருந்து மீளுவதற்கான தந்திரோபாயங்களும் நடவடிக்கைகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.